Regd. No. M. 4593. KUDI ARASU 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd 1924.

தனிப்பிரதி விலை ரூ. 0-1-6 சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0 }

மாலை 19 } ஈரோடு 16-2-1946 மாசிமீ 5உ { மலர் 19

# சென்னையில் திராவிட இன எழுச்சி!

## 1000 கறுப்புச்சட்டைப்படை வீரர்களின் அணிவகுப்பு

### இந்தி நுழைந்தால் மீண்டும் போராட்டம்

### மயிலைக் கடற்கரையில் 15000 பேர் கொண்ட மாபெருங் கூட்டம்

## பெரியார் வீரவுரை

தென் சென்னை 4வது பகுதி திராவிடர் கழக மாநாடு (ஜஸ்டிஸ்கட்சி) 10-2-46ம் தேதியன்று மயிலாப்பூர் கபாலி டாக்கீஸில் நடைபெற்றது. இந்த மாநாடு ஒரு பகுதி மாநாடாக இருந்தாலும், ஒரு பெரிய ஜில்லா மாநாடு போலவே இருந்தது. காலை 7-மணியிலிருந்தே மயிலாப்பூர் வரும் பஸ்களில் கறுப்புச் சட்டை அணிந்தவர்களும், கறுப்புத் துணிகளை மேலே போட்டுக் கொண்டு வந்தவர்களும், கறுப்புபேட்ஜ் அணிந்தவர்களுமாக (கறுப்புத் துணி கிடைக்காததால்) வந்து இறங்கிய வண்ணமிருந்தனர். வட சென்னைப் பகுதி கறுப்புச் சட்டைப் படையினர் சென்னை ஜில்லா கறுப்புச்சட்டைப் படை உதவிக் கேப்டன் தோழர் எஸ். ஆர். சாண்டோ அவர்கள் தலைமையில் அணிவகுத்துவந்த காட்சி பார்ப்பவர்கள் மனத்தை உருக்கிவிட்டது. தோழர் எஸ். ஆர். சாண்டோ அவர்கள் ஒரு ராணுவ அதிகாரி போன்று கறுப்பு உடைதரித்து இருந்தார்.

சென்னை ஜில்லா கறுப்புச் சட்டைப் படையின் கேப்டன் தோழர் சி. கணேசன் அவர்களும், உதவி கேப்டன் தோழர் எஸ். ஆர். சாண்டோ அவர்களும் சுமார் 500 பேர்கட்கு மேற்பட்டக் கறுப்புச் சட்டைப் படைத் தொண்டர்களை அணிவகுக்கச் செய்து வைத்து பெரியார் அவர்கள் மாநாட்டுக் கொட்டகைக்குள் நுழையும்போது வரவேற்றகாட்சி மிகஉற்சாகமாக இருந்தது. மாநாட்டிற்கு சுமார் 3000 ஆண்களும், 100க்கு மேற்பட்ட பெண்களும் வந்திருந்தார்கள். அதில் 10 பெண்கள் கறுப்புச் சேலை அணிந்திருந்தார்கள். மாநாடு ஆரம்பிப்பதற்கு முன் பல தோழர்கள் இயக்க கீதங்கள் பாடினார்கள்.

முதலில் கறுப்புச் சட்டைப் படை தொண்டர்கள் அணிவகுக்க பெரியார், தோழர்கள்சி. என். அண்ணாதுரை, எஸ். முத்தையா முதலியார், சி. டி. டி. அரசு முதலியவர்களைக்கொண்டு புகைப்படம் எடுக்கப்பட்டது. தோழர் ஏ. பி. ஜனார்த்தனம் எம். ஏ. அவர்கள் கொடியேற்றுவித்து திராவிடர் இயக்கத்தின் அவசியம் பற்றிப் பேசினார். சென்னை ஜில்லா திராவிடர் கழக உபதலைவர் தோழர் கே. பி. பெருமாள் பி. ஏ. அவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்து இயக்கத்தின் எதிர்காலத்தைப் பற்றிப் பேசினார்.

வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் எம். கே. தங்கவேலர் சில அசந்தர்ப்பங்களால் வரவில்லை. அவருக்குப் பதிலாக தோழர் ஆர். சம்மந்தம் அவர்கள் வரவேற்புரைபடித்தார்.

### தலைவர் பிரரேபணை

பின் தலைவர் சி. டி. டி. அரசு அவர்களை மாநாட்டிற்குத் தலைமை வகிக்குமாறு தோழர்கள் அன்பழகன், குப்புசாமி, கே. கோவிந்தசாமி, இருதய நாதன், சி. என். அண்ணாதுரை, பெரியார் ஈ. வெ. ராமசாமி ஆகியவர்கள் பிரரேபித்தும், ஆமோதித்தும் பேசினார்கள்.

தோழர் சி. டி. டி. அரசு அவர்கள் நீண்ட கைதட்டலுக்கிடையே ஊக்கமும், உற்சாகமும், உணர்ச்சியுமிக்க பிரசங்கத்தைச் செய்தார். அவர் பிரசங்கம் செய்தபோது இடை இடையே மக்கள் காட்டிய உற்சாகமும், கைதட்டுதலும் எல்லையற்றிருந்தது.

பின் முதலாவதாக மாஜி மந்திரி தோழர் எஸ். முத்தையா முதலியார் பேசியபோது, திராவிடர் கழகத்தின் அவசியத்தைப் பற்றியும், திராவிட நாட்டுப் பிரச்சினை புதிதல்லவென்றும் பேசினார்.

பின் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் நீண்ட கைதட்டுதலுக்கிடையே எழுந்து திராவிடர் கழகத்தின் இப்போதைய நிலை பற்றியும், அதற்கு வாலிபர்கள் செய்யவேண்டிய வேலைகளைப் பற்றியும், இயக்கத்தில் கட்டுப்பாடு இருக்க வேண்டியதின் அவசியம் பற்றியும், காந்தியார் சென்னை வந்து செய்த புராணப் பிரச்சாரத்தைப் பற்றியும், மக்களை அறிவிலிகளாக ஆக்கிவருவதைப் பற்றியும் கடவுள், மதம் இவைகளைப்பற்றி இயக்கம் என்ன சொல்லுகிறது என்பது பற்றியும் காந்தியார் செய்துவரும் பஜனை வேலைகளைக் கண்டித்தும் மிக விரிவாகவும், விளக்கமாகவும் சுமார் 2-மணி நேரம் பேசினார். பின் 6 தீர்மானங்கள் நிறைவேறின.

### தீர்மானங்கள்

(1) தமிழ்நாட்டு நடிகமணிகள் எம். கே. தியாகராஜ பாகவதர், என். எஸ். கிருஷ்ணன், ஆகியவர்களைக் கருணை காட்டி

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

12-1-46ல் அருப்புக்கோட்டை சென்றிருந்த

# பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களுக்கு

விஸ்வகர்ம ஆபரணத் தொழிலாளர் சங்கத்தார்
அன்புடன் வாசித்தளித்த

## வரவேற்பு உபசாரம்

★

அறிவியக்கம் கண்ட பெரியாரும், திராவிட நாட்டுத் தனிப்பெருந் தலைவருமான பெரியார் அவர்களே! ஆற்றல் மிகுந்த அண்ணலே! தங்கள் வரவால் நாங்கள் கழி பேருவகை கொள்கிறோம்.

பன்னூற்றாண்டுகளாய் மங்கிக்கிடந்த திராவிடப் பெருமக்களின் தனிப்பெரும் சக்தியாம் பகுத்தறிவுணர்ச்சியைத் தட்டியெழுப்பிச் சலியாது உழைத்துவரும் தன்னலம் துறந்த தங்கள் பணியை யாங்கள் என்றும் மறவோம்.

ஏற்றமிகுந்த எந்தலே! திராவிடக் கலையுலகின் நிகரற்ற மணிகளாய் விளங்கிய இசைவாணர் எம். கே. தியாகராஜ பாகவதரையும், நகைச்சுவை அரசும், சீர்திருத்தவாதியுமான என். எஸ். கிருஷ்ணன் அவர்களையும் தமிழ்க்கலை வளர்ச்சி கருதி தாங்கள் விடுவிக்கச் செய்யும் தங்கள் மகத்தான முயற்சி வெற்றியடைய வேண்டுமாயும், அவ்வித முயற்சியில் எங்கள் முழு ஆதரவையும், அளிக்கச் சித்தமாய் இருக்கிறோம் என்பதையும் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

திராவிட மக்களின் சேவையே சிறந்ததெனக் கருதிப்
பணியாற்றும் தியாக மூர்த்தியே!

இதுகாறும் எங்கள் வார்த்தைகளுக்குச் செவிசாய்த்த தங்களுக்கு எங்கள் நன்றியை மீண்டும் செலுத்துவதோடு, தங்களுக்குத் திடகாத்திரமும், நீண்ட ஆயுளும், குறையாப் புகழும் மேன்மேலும் உண்டாக வேண்டுமாய் விரும்பும்,

தங்களன்புள்ள,
விஸ்வகர்ம ஆபரணத் தொழிலாளர் சங்கத்தார்,
அருப்புக்கோட்டை.

## சேலத்தில் பெரியார்

சேலம் சுயமரியாதை சங்கத்தின் கட்டிட நிதிக்காக நாகை திராவிட நாடக சபையாரால் ஒரு உதவி நாடகமாக 6-2-46ம் தேதி இரவு பெரியார் அவர்கள் தலைமையில் "இழந்தகாதல்" நாடகம் நடிக்கப்பட்டது. எவ்வித முயற்சியும், முதல்நாள் விளம்பரமும் இல்லாமல் கொட்டகையில் மாத்திரம் 1-மணி நேர டிக்கட் விற்பனையில் 600 ரூபாய் வசூலாயிற்று. சுமார் 500, 600 பேர்களுக்கு மேல்ாகஇடமில்லாமலும்,டிக்கட்டில்லாமலும் திரும்பிச் சென்று விட்டார்கள். சேலத்தில் இந்த நாடகசபையார் ஒருமாதகாலமாக நடித்துவருகிறார்கள். தினமும் நானூறு ரூபாய்க்குக் குறைவில்லாமல் 600 ரூபாய் வரை வசூலாகிக்கொண்டு வந்தது. தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமைவகித்த அன்று 700 ரூபாய் போல் வசூல் ஆயிற்று. சேலத்தில் இவர்களது நாடகம் மிக்க பிரபல்யமாகி சில நாட்களில் இரண்டு காட்சிகளும் நடந்தன. ஏராளமான சன்மானங்களும், மெடல்களும், கோப்பைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. இவர்களுக்கு சேலம் சுயமரியாதைச் சங்கத்தார்கள் கூடிய அளவு ஆதரவளித்தும் வந்திருக்கிறார்களென்றும் சொல்லலாம். நாடகத்தைப் பற்றி இயக்கத் தோழர்களுக்கு மிக்க திருப்தியும், மகிழ்ச்சியும் ஏற்பட்டிருக்கிறது. இதுகண்டு சில எதிரிகள் கொட்டகைக்காரர்களை அணுகி, கொட்டகையை இந்த சபையாருக்கு மேலும் கொடுப்பதற்கில்லாமல் செய்து விட்டதால் திடீரென்று நாடகத்தை நிறுத்திவிட்டு ஆத்தூரில் நாடகம் நடத்த செல்லுகிறார்கள். நன்கொடை நாடகத்தன்று வசூலான ரூபாய் 600ல் கொட்டகை வாடகை, வரி விளம்பரம், நடிகர் செலவு முதலியவைகள் ரூபாய் 301 போக பாக்கி 299 ரூபாய் பெரியார் அவர்கள் கையில் கொடுத்து சுயமரியாதைச் சங்கத்தாரிடம் கொடுத்து விடுமாறு நாடகசபைத் தலைவர் திரு வேணு அவர்கள் கேட்டுக் கொண்டார். பெரியார் அவர்கள் நாடக சபையாரைப் புகழ்ந்து பாராட்டி பொது மக்களையும் இதுபோன்ற நாடகசபையாரை நல்லவண்ணம் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இம்மாதிரியான முறையில் பொதுநலத்துக்காக நடிக்கிற குழுவினர்கள் நாணயமாகவும், ஒழுக்கமாகவும் நடந்துகொள்ள வேண்டுமென்றும், அப்படி இல்லாவிட்டால் அவர்களது தவறுதல் இயக்கத்தையே பாதிக்குமென்றும் வேண்டிக் கொண்டு, 299 ரூபாயுடன் பெரியார் அவர்கள் தனது சொந்தத்தில் 101 ரூபாய் சேர்த்து ஆக ரூபாய் 400-ம், சு.ம. கட்டிட நிதி பிரமுகர் தோழர் ரோசு அருணாசலம் அவர்களிடம் மேடையில் கொடுத்தார். நாடக மத்தியில், "ஊழியன்" என்கின்ற ஒரு நாடகக் கதையின் பாகத்தை நடித்துக் காட்டியது குறிப்பிடத் தக்கது. அதில் ஏராளமான கறுப்புச் சட்டைத் தொண்டர்கள் வருவதும், பல விதமான புரட்சிகரமான சமுதாயத் தொண்டுகள் செய்வதும் குறிப்பிடத் தகுந்ததாகும்.

## சென்னை ஜில்லா திராவிடர் பெடரேஷன்

"உறுப்பினர் சேர்க்கும் வாரம்"

சென்னை ஜில்லாவில் 1946-ம் ஆண்டுக்கு உறுப்பினர் சேர்க்கும் வேலையைத் துரிதப்படுத்த 17-2-46 ஞாயிற்றுக் கிழமை காலை 8-30 முதல் மாலை 4-மணிவரை ஒவ்வொரு டிவிஷனிலுள்ள கிளைச்சங்க நிர்வாகிகளும் மற்றத் தோழர்களும் எல்லா டிவிஷன்களிலும் தெருக்கள் தோறும் வீடு வீடாகச்சென்று உறுப்பினர்களைச் சேர்த்து இவ்வாண்டு சென்னையில் மட்டும், குறைந்தது 10 ஆயிரம் உறுப்பினர்களையாவது சேர்த்துக் கொடுக்குமாறு மிகவும் கேட்டுக் கொள்வதுடன், ஒவ்வொரு டிவிஷனிலுமுள்ள கிளைச் சங்கங்களும் சர்க்கிள் அமைப்பாளர்களும், உடனே இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவும் வேண்டுகிறேன்.

என். வி. நடராசன்
பொதுக் காரியதரிசி

# 'ராம பஜனை' பொதுக்கடவுள் வழிபாடா?

## மகாத்மாவா? மடாதிபதியா?

(தென்சென்னை (4-வது பகுதி) திராவிடர் 1-வது மாநாடு மயிலாப்பூர் கபாலி டாக்கீசில் 10-2-46ல் நிகழ்வுற்றபோது தலைமை வகித்த தோழர் C. D. T. அரசு அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு)

★

பெரியார் அவர்களே, தாய்மார்களே, தோழர்களே!

சென்னையிலே, அதிலும் மயிலையிலே-ஆரியக் கோட்டமாகிய மயிலையிலே முதல் முதல் நடக்கும் திராவிடர் கழக மாநாட்டிற்குத் தலைமைவகிக்கும் பெருமையை எனக்களித்த உங்கள் அனைவருக்கும் என் வணக்கமும் நன்றியும் உரியது.

சற்று ஏறக்குறைய இரண்டு திங்களுக்குமுன், நம் நகரில் நடந்த சுயமரியாதை மாநாட்டில், நமது தலைவர் பெரியார் அவர்கள், சென்னையிலிருக்கும் திராவிடர்களுக்கு உணர்ச்சி ஊட்டும்பொருட்டு "சென்னையிலிருக்கும் திராவிட மக்கள் மிகவும் பின் அணியில் இருப்பவர்கள், உணர்ச்சி அற்றவர்கள், ஊக்கம் இல்லாதவர்கள்" என்று சொன்னதின் விளைவு இன்று இங்கு கூடிய தென் சென்னை திராவிடர் கழக மாநாடு என்றால் மிகையாகாது. உண்மையிலேயே திராவிட இனத்தைச் சேர்ந்த தமிழர், ஆந்திரர், கேரளர், கன்னடர் பலர் இச் சென்னையில் வாழ்ந்துவந்தாலும், ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தும் அவர்களிடையே ஒருவிதமான ஒற்றுமையோ, அல்லது இன உணர்ச்சியோ இல்லாமல் வாழ்ந்து வந்தார்கள்-வருகிறார்கள். ஒற்றுமையாய் வாழாமல் பிரிந்துகிடக்க மதம், புராணம், தேசியம், ராமராஜ்ஜியம் என்கிற பித்தலாட்டங்களைப் புகுத்தி திராவிடர்களை மயக்கி, இழிவுபடுத்தி, அடக்கிவைத்தார்கள் ஆரியரும், ஆங்கிலேயரும், வடநாட்டாரும் சேர்ந்து. இந்த மயக்கத்திலிருந்து திராவிடரைத் தட்டி எழுப்பிவிட்டார் நமது தலைவர் பெரியார். ஆகவே நாம் திராவிடர்கள், நம் நாடு திராவிட நாடு, திராவிட தனி அரசு அமைத்து வளம்பெற்று வாழ வேண்டுமென்று எழுச்சிகொண்டு அதற்கு ஆவனசெய்ய முனைந்துள்ளோம்.

உணர்ச்சியும், எழுச்சியும் தென்னாட்டு ஆரியர்களுக்கு அச்சத்தைத் தந்துள்ளது. "பிராமண பாதுகாப்புச்" சங்கங்கள் நிறுவும் அவசியமும் ஏற்பட்டுவிட்டது. வடநாட்டாருக்கு ஓலை விடவும் காவடி தூக்கவும் நேர்ந்தது. நம் உணர்ச்சியை அழித்து, எழுச்சியைத் தடுத்து ஆட்டங் கொடுத்த தங்கள் ஆதிக்கத்தைத் திரும்பவும் நிலைநாட்டத் தோழர் காந்தியும் வரவழைக்கப்பட்டார்.

வடநாட்டு பனியா தோழர் காந்தி அவர்களை, நம் தென்னாட்டு ஆரியர்கள் அழைத்துவந்து, தோழர் காந்தி அவர்களை ஒரு பெரிய மடாதிபதியாக்கி, நம்மை எவ்வளவு இழிவு செய்யமுடியுமோ அவ்வளவும் செய்து கொள்ளையும் அடித்தார்கள். அணுக்குண்டு காலத்தில் "ராம்" பஜனை செய்தும், அங்கு வந்த ஏமாந்த திராவிடர்களை அறிவிலிகளாக்கி தாளம்போட்டு "பஜனை" செய்யும்படி செய்தார். பணக்காரர்களையும், பட்டதாரிகளையும் பக்கம் திருத்திக் காட்டி கிட்டியமட்டும் பணமும் பறித்தார் என்றால், அது பகற்கொள்ளையும் படுமோசமும் அல்லாமல் வேறு எதுவாக இருக்கமுடியும்? தென்னாட்டிலே வீழ்த்தி புதைக்கப்பட்ட இந்தியைத் தென்னாட்டுப் பணக்காரர்களிடத்திலிருந்தே பணம் பறித்து மறுபடியும் உயிர்ப்பிக்கச்செய்யும் சூழ்ச்சி இது என்பதை எந்த உணர்ச்சியும், தன் மதிப்பும் உள்ள திராவிடன் மறுக்கமுடியும்? அல்லது மறைக்கமுடியும்? நமது தலைவர், பெரியார் அவர்கள் அடிக்கடி, வடநாட்டு பனியாக்களுக்கும், தென்னாட்டு ஆரியர்களுக்கும் மிக நெருங்கிய தொடர்பும், ஒற்றுமையும் இயற்கையில் உண்டு என்றும், இத் தென்னாட்டு ஆரியர்கள், வடநாட்டார்களைக் கொண்டு நம்மைக் கொள்ளை அடித்து, அடிமைப்படுத்தி, தாங்கள் (ஆரியர்கள்) இங்கு வளமாக வாழ்வதற்கு வழிசெய்துக் கொள்ளுகிறார்கள் என்றும் சொல்வதின் உண்மை இன்று நன்று விளங்கி இருக்குமென்று நம்புகிறோம். கேவலம், ஒரு சிறிய கட்டிடம், அதில் ஒரு ஆரியக் கூட்டம் இந்தியைக் கற்பிப்பதற்குத் தியாகராய நகரில், இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்குப் பின், ஒழிந்து, மறைந்து நடந்துவந்தது அச்சத்துடன். இன்று தேர்தலில்பெற்ற போலி வெற்றியால் செருக்குற்று, பலரும் பணமும் திரட்டி கொண்டுவந்தார்கள் அவர்களுடைய மடாதிபதி தோழர் காந்தி அவர்களை. மகான் என்றும், மகாத்மா என்றும் அவதாரம் என்றும் பறை சாற்றினார்கள். அதற்குப் பிரதிபலனாக, பணக்காரரிடத்திலும் பட்டம் பதவிக்காரர்களிடத்திலும், பாமர மக்களிடத்திலும் பணக்கொள்ளை அடித்தார்கள்.

தோழர் காந்தி "இந்து" அல்ல, இந்தியர்; காங்கரஸ் "இந்து" இயக்கமல்ல, இந்தியர் இயக்கம், அதற்குத் தலைவர் அவர் என்று சொல்லும் தோழர்களே, தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். தோழர் காந்தி அவர்கள் "ரகுபதி ராகவ ராஜாராம்" பஜனை செய்வதின் பொருள் என்ன, விளைவு எவ்விதமிருக்கும் என் பொதுவான ஆண்டவர்பேரில் இவருடைய "பிரார்த்தனை"களை செய்திருக்கக்கூடாது. இவருடைய "பிரார்த்தனைக்" கூட்டங்களில் இந்துக்கள், முஸ்லீம்கள், இருந்தார்கள். திராவிடர்கள், ஆதித் திராவிடர்கள், ஆங்கிலேயர்கள், பார்சிகள் இன்னோரன்ன பல திறப்பட்ட மக்கள் வருகிறார்களே என்பதற்காவது பொதுவான ஆண்டவன் வழிபாடு செய்யவில்லையே. உண்மையில் அவருடைய வழிபாடு ராமனுடைய வழிபாடு. அவர் வழி கண்ணன் காட்டிய வழி. இதை இந்துக்கள் நீங்கலாக பிறர் ஏற்றுக்கொள்ளமுடியுமா? முடியாது. ஆகவேதான், நாங்கள் வேறு, நீங்கள் வேறு என்று முஸ்லீம் தோழர்களும், திராவிடத் தோழர்களும் சொல்லுகிறோம். உண்மையைச் சொன்னால், எங்களைக் கண்டிப்பதில் என்ன நியாயமிருக்கிறது. மேலும், "நான் வரச்சொல்லவில்லை. அவர்களுடைய சொந்தப் பொறுப்பில் வருகிறார்கள்" என்றும் தோழர் காந்தி சொல்லுகிறார். ஆம், உண்மை. உங்களுடைய "பிரார்த்தனை"க்காக அவர்கள் அங்கு வரவில்லை. உங்களை "மகானாகவோ" அல்லது "மகாத்மாவாகவோ" அல்லது "அந்தர் ஆத்மாவாகவோ" அல்லது "அவதாரமாகவோ" கருதி வரவில்லை: ஆனால் மிருகச் சாலையில் ஒரு "புதியது" வந்திருந்தால் எப்படிப்போய்ப் பார்க்க விரும்பப்படுவர்களோ, அல்லது பார்ப்பார்களோ, அதைப்போல்தான் தங்களைக் காணவந்தார்கள் என்று சொல்லுகிறோம். நம்முடைய காங்கரஸ் திராவிடத் தோழர்களுக்கு இது சிறிது கோபத்தை மூட்டும், கக்குவார்கள் வக்கனையை என்பதும் எங்களுக்குத் தெரியும். ஆனால் எங்களைக் காய்வதற்குப் பதில் காங்கரஸ் மடாதிபதி தோழர் காந்தியையோ அல்லது அவருடைய சம்மந்தி அன்பர் ஆச்சாரியையோ கேட்டு பதில் பெற்றால் அவர்கள் சூழ்ச்சியிலிருந்து தப்பலாம்.

தமிழ்நாட்டு காங்கரஸ் தலைவர் தோழர் காமராச நாடார், காங்கரசுக்காக உழைத்தவர், சிறை சென்றவர், தியாகம் செய்தவர்; ஆனால் திராவிடர், ஆச்சாரியாரின் தவறை எடுத்துக்காட்டி எதிர்த்தவர். இப்போது ஆச்சாரியார் கூட்டத்தாரால் (தோழர் காந்தியின் உதவியைக் கொண்டு) ஒதுக்கி வைக்கப்பட்டார். இன்று அவருடைய நிலைமை அது. தோழர் காந்தி தமிழ்நாட்டுக்கு வந்தார். இருந்தார், ஒரு வாரத்திற்குமேல். ஆனால் தமிழ்நாட்டு காங்கரஸ் தலைவர், மற்ற "பஜனை" கோஷ்டிகளில் ஒருவராயிருந்து "பஜனை" செய்தார். தோழர் காந்தியே, காங்கரஸ் திராவிடத் தோழர்களை ஏமாற்றும் சூழ்ச்சியுடன் "மேடைக்கு வந்து தலைமை வகியுங்கள்" என்று சொன்னாராம் இந்நாட்களில் ஒருநாள். இது அன்பர் ஆச்சாரியாரை—ஆரியரை, நியாயத்திற்காக எதிர்ப்பதற்கு தண்டனை.

தோழர் காந்தியை வரவேற்றவர்கள் தோழர்கள் ஆச்சாரியாரும், சர். என். கோபாலசாமி அய்யங்காரும். தட்டுத் தடுமாறி தானாகவே அம்பத்தூர் ரயில் நிலையம் சேர்ந்த தமிழ்நாட்டு காங்கரஸ் தலைவர் காமராச நாடார், தோழர் காந்திக்கு மாலையிட்டார், அவ்வளவுதான். மாலையிட்டவரை மறந்து காந்தியார் சர். அய்யங்கார், சம்மந்தி ஆச்சாரியார் ஆகிய இரு ஆரியர் புடைசூழ காரில் ஏறிக்கொண்டு தியாகராய நகருக்கு சென்றுவிட்டார். இது முறையா? அல்லது நியாயமா? இதைத்தான் நாங்கள் சொல்லுகிறோம், வடநாட்டாருக்கும், தென்னாட்டு ஆரியருக்கும் உள்ள ஒப்பந்தம் என்று. இதில் என்ன தவறு இருக்கமுடியும்? எங்களைத் தூற்றுவதில் என்ன பயன்? நாங்கள், தோழர்கள் அண்ணாமலையையோ, அல்லது அவநாசியையோ அல்லது தேவரையோ அல்லது உபயதுல்லாசாயபுவையோ காரில்ஏற்றிக்கொண்டு போகச் சொல்லவில்லை. தோழர் காமராச நாடாரையும்; உழைத்தவர், காங்கரசுக்காக அனைத்தையும் துறந்தவர் என்கிறதினால் அல்ல, அவர் தமிழ்நாட்டு காங்கரஸ் தலைவர் என்கிற முறையில், அவர்தானே அருகே இருக்கவேண்டும், தோழர் காந்தியார் தமிழ்நாட்டை விட்டு ஒழியும் வரையில். தோழர் காந்தி மற்ற மாகாணங்களில் போனபோது அந்தந்த மாகாணத் தலைவர்கள் தானே முதல் இடம் பெற்று அவருடன் இருந்தது. காலஞ்சென்ற தோழர் சத்தியமூர்த்தி இருந்தால் இப்படி நடந்திருக்குமா? இங்கு ஏன் இந்த மாறுதல்? காமராஜ் திராவிடன் என்கிற குறையினாலா அல்லது ஆச்சாரியாரை எதிர்த்தவர் என்கிறதினாலா?

ஆனால் அருகேயிருந்து "காட்சி" கொடுத்ததெல்லாம் அன்பர் ஆச்சாரியாரோ அல்லது ஆங்கில மாது அகதா ஆரிசனோதானே? "வெள்ளையனே வெளியே போ!" ஆனால் எப்போதும் பக்கத்திலிருப்பது, ஆங்கில மாது அகதா ஆரிசன். வங்காளத்தில், வெள்ளையனை ஏழு முறைகள் அவன் வீட்டிற்குப் போய்ப் பார்ப்பது. சென்னைக்கு வந்தவுடன் ஓடுவது கிண்டிக்கு ஆங்கிலேயனைப் பார்க்க. இது என்ன பித்தலாட்டம் என்றுதான் நாங்கள் கேட்கிறோம்.

தோழர் காந்தி "இந்தி பிரச்சார" இடத்திற்குப் போனதும் ஆலத்தி எடுப்பதற்கு ஆரிய அம்மைகள். தலையைத் தொட்டு கண்ணில் வைத்துக் கொள்வதற்கும் ஆரிய அம்மைகள். ஆனால் காலைத்தொட்டு வணங்க காமராசர் இனத்தைச் சேர்ந்தவர்கள். இதைத் தடுக்கவும், கண்டிக்கவும் செய்யாமல் தோழர் காந்தி இருந்தது நியாயமா? நேர்மையா? மனிதத் தன்மையா? ஏன்; மற்றொரு நாள், ஒரு ஆரியப் பையனை அழைத்து வந்து அவனுடல் எல்லாம் மஞ்சள் பூசி, மஞ்சள் ஆடை உடுத்தி, உச்சிக்குடுமியோடு அவன் ஒரு "அவதாரம்" என்று தோழர் காந்திக்கு அறிமுகப்படுத்தினபோது, அவர் சிரித்து அவனை ஆசீர்வதித்துச் சென்றாராம். ஒரு "அவதாரம்" மற்றொரு "அவதாரத்தை" ஆமோதிக்கிறது, ஆதரிக்கிறது. மற்றபடி இது எதைக்காட்டுகிறது. சிந்தியுங்கள். மக்களை மக்களாக நினைக்கிற எந்த மனிதனும் இதைக் கண்டிக்காமலிருக்க முடியுமா? கடுமையான சொல், தெரிந்துதான் உபயோகப்படுத்தினேன். கட்டுக்கடங்காமல் அட்டூழியங்கள் அதிகமாய்ப் போய்க் கொண்டிருப்பதினால்தான். உண்மையிலேயே சொல்லுகிறேன், தோழர் காந்தியை இந்த வகையில் எதிர்க்க எவருக்கும் இன்று தைர்யமில்லை. ஏன்? பித்தலாட்டத்திற்கும், ஆடம்பரமான வாழ்வுக்கும், ஆதிக்கத்திற்கும் சுயநலத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஆகவே அவரை எதிர்த்தால், தங்களுடைய வாழ்வு கெடும் என்கிற சுயநலத்தினால் தான் எதிர்க்க பயப்படுகிறார்கள். ஆனால் தோழர் காந்தியை எதிர்க்க, கடுமையாய்க் கண்டிக்க, அவருக்கு எதிராக ஒரு பெரிய இயக்கத்தை செல்வாக்குடன் நடத்த, உறுதியான உள்ளத்தையும் உடையவர் நம் தலைவர் பெரியார் அவர்கள் தான். ஆகவேதான் அவருடைய நிழலிலே நின்று நாங்களும் கண்டிக்கிறோம்.

நம் நாட்டுக் கொடைவள்ளல் அன்பர் அழகப்பா அவர்களை நாங்கள் எல்லோரும் அறிஞர் என்று எண்ணிக்கிடந்தோம். விஞ்ஞான வளர்ச்சி, கல்விப் பெருக்கம், தொழில் ஓம்பல் இன்னோரன்ன துறைகளில் அவர் செய்துவரும் முயற்சியைக் கண்டு. ஒரு சில விநாடிகளில் அறிஞர் அளகப்பாவை அறிவிலியாக்கிவிட்டுச் சென்றார் தோழர் காந்தி. தோழர் அளகப்பா பணம் கொடுத்தாரே என்கிறதல்ல எங்களுக்கு; அல்லது எங்களுக்குக் கொடுக்கவில்லையே என்கிற பொறாமையும் அல்ல. ஆனால் அவரிடத்திலிருந்து வாங்கின பொருளைக் கொண்டு ஒரு "அரிஜன" தொழிற்பள்ளி கட்டப் போகிறார்களாம். பணம் தந்தது அன்பர் அளப்பா; பள்ளிக்கு "தக்கர் பாபா"வின் பெயர். இதைப்பற்றியும் எங்களுக்குக் கவலை இல்லை; இது புதிதுமல்ல. எங்களுக்குத் தெரிந்தது. நாங்கள் சொல்வதற்கு இது இப்போது நிகழ்ந்த ஒரு எடுத்துக்காட்டு. ஆனால் எங்களை வருந்தச் செய்வது "அவருடைய முன் ஜன்மத்தில் பட்ட கடனை, இப்போது கொடுக்கிறார். மற்றப்படி அவர் தயாள சிந்தையுடனோ அல்லது தன்னுடைய பொருளையோ கொடுக்கவில்லை" என்று தோழர் காந்தியார், காலையில் பொருளைப் பெற்றுக் கொண்டு மாலையில் சொன்னதுதான். தோழர் அளகப்பா அவர்கள் இதைக் கேட்டு இன்புற்று இருப்பாரா? அல்லது இறுமாந்து போயிருப்பாரா? அல்லது தன் தலைவிதி என்று எண்ணிக்கொண்டிருப்பாரா? அல்லது முன் ஜென்மத்தில் செய்த கர்மம் என்று எண்ணி இருப்பாரா? "முன் ஜென்மத்தில் பட்ட கடன்" என்று தோழர் காந்தியார் கூறியது, அன்பர் அளகப்பா உள்ளத்தில் எந்தெந்த எண்ணங்கள் அலைமோதினவோ அறியோம். ஆகவேதான் அறிஞர் அளகப்பா அவர்கள் அறிவிலி ஆனார் என்று நாங்கள் சொல்லுகிறோம். கோபிப்பதில் பயனில்லை, உங்கள் கோபத்தை வடக்கே செலுத்துங்கள். ஆகவே காங்கரஸ் திராவிடத் தோழர்களே! தயவு செய்து இவைகளையெல்லாம் சிந்தித்துக் கீழ்க்கண்ட ஏதாவது ஒரு முடிவுக்கு வாருங்கள் என்று வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(தொடரும்)

## கோவை மாவட்ட திராவிடர் கழகம் ஈரோடு

கோவை மாவட்ட திராவிடர் கழகத்தின் சார்பாக கோவை மாவட்டத்தில் இயக்கப் பிரச்சாரம் செய்ய தோழர் பாலகுரு அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். ஷையார் மாவட்டம் முழுதும் பிரச்சாரம் செய்வார். நமது இயக்கத் தோழர்கள் ஆங்காங்கு கூட்டங்கள் கூட்டி இவ்வாண்டுக்கு உறுப்பினர்களையும் சேர்த்துக்கொடுக்க கேட்டுக்கொள்கிறோம்.

விபரங்களுக்கு, என். இ. பாலகுரு,
C/o பழயகோட்டை பங்களா, ஈரோடு.
P. பழனிச்சாமி, S. R. சந்தானம்.
செயலாளர்கள்.

## நடக்க இருப்பவை

★தாராசுரம் திராவிடர் கழக சார்பில் கும்பகோணம் நடேசன் தலைமையில் நூறு கருப்புச் சட்டை வீரர்கள் வழிநெடுக பிரச்சாரம் செய்துகொண்டு நீடாமங்கலத்தில் 23, 24 தேதிகளில் நடைபெறும் மாணவர் மாநாட்டிற்குச் செல்வார்கள்.

★விருதுநகர் திராவிடர் கழக நிர்வாகிகள் கூட்டம் 17-2-46 காலை 10-மணிக்கு என். பி. எஸ். ஹாலில் நடைபெறும். தோழர்கள் வருக.

★சென்னை திருவல்லிக்கேணி அபிபுல்லா சாயபு தெரு 79 நெ இல்லத்தில் "கீழ் சென்னை திராவிடர் கழக மாநாடு" நடத்துவது பற்றி யோசிக்க ஒரு ஆலோசனைக் கூட்டம் 24-2-46 ஞாயிறு காலை 4-மணிக்கு நடைபெறும். அனைவரும் வருக என சுருளியமா அழைக்கிறார்.

★வட சென்னை மத்திய திராவிடர் கழக கமிட்டிக் கூட்டம் 22-2-46 இரவு 7-மணிக்கு வட சென்னை திராவிடர் நடிகர் கழகத்தில் நடைபெறும் என எம். கே. டி. சுப்பிரமணியம் அறிவிக்கிறார்.

---

### திருச்சிஜில்லா திராவிடர்கழக 17-வது மாநாடு

ஷை மாநாடு 3-3-46 ஞாயிறு காலை 9மணிக்கு, சோழங்கநல்லூர் அங்கப்ப அம்பலகாரர் பந்தலில் நடைபெறும். தோழர் என். அர்ஜுனன் தலைமை வகிப்பார். சிவகங்கை தோழர் கே. ராஜசேகரன் பி. ஏ., பி. எல்., கொடியேற்றுவார். தளபதி சி. என். அண்ணாதுரை எம். ஏ., மாநாட்டைத் திறந்து வைப்பார். பெரியார் அவர்களும் இயக்க அன்பர்களும் மாநாட்டிற்கு வந்து பங்குகொள்வார்கள். காலை 6மணிக்கு 500 கறுப்புச் சட்டை தொண்டர்கள் கோட்டைமணிக்கூண்டிலிருந்து தென்னூர் வழியாக ஊர்வலமாய் சோழங்கநல்லூர் அடைவார்கள்.

மாலை 6-30 மணிக்கு புத்தூர் மைதானத்தில் தலைவர்கள் சொற்பொழிவு நடக்கும்.

மத்தியான உணவு, 4 அணா கொடுத்து எல்லோரும் சீட்டு பெற்றுக்கொள்ள வேண்டும்.

வரவேற்புக்கழகத் தலைவர்
ஏ. சின்னதுரை அம்பலகாரர்.

டி. பி. வேதாசலம்,
எம். நடராசன்,
செயலாளர்கள்.

---

### பொதுக்கூட்டம்

17-2-46 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு சென்னை சிந்தாதரிப்பேட்டை நேப்பியர் பார்க்கில் தோழர் வி.பி.ஜஸ். மணியர் தலைமையில் திராவிடர் கழக கூட்டம் நடைபெறும்.

தோழர்கள் எ. பி. ஜனார்த்தனம் எம். ஏ., கே. அன்பழகன் எம். ஏ., என். ஜீவரத்தினம், என். வி. நடராசன், கே. கோவிந்தசாமி, என். எஸ். தங்கரூபன் மற்றும் பலர் பேசுவர்.

ஏ. சங்கரய்யா,
நெல்லை, ரங்கநாதன்,
செயலாளர்கள்.

---

### மதுரை இளைஞர் மாநாடு

நீடாமங்கலம் மாணவர் மாநாட்டை முன்னிட்டு 24-2-46 நடைபெற இருந்த மதுரை இளைஞர் மாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## பெயர் மாற்றம்

தங்களுடைய பெயர்களை மாற்றி வைத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றவர்கள் அடியிற்கண்டபடி நடந்துகொண்டால் பெயர் மாற்றிக்கொள்ளலாம்.

1. பெயர் மாற்றிக்கொள்ள விரும்புகிறவர்கள், தனது பெயரை மாற்றிக்கொள்ள வேண்டி இருக்கிறது என்று ஜில்லா கலெக்டருக்கு விண்ணப்பம் போடவேண்டும்.

2. கலெக்டர் அதை ஜி. போலீசு சூப்பிரண்டுக்கு அனுப்புவார்.

3. அது போலீசாரால் விசாரிக்கப்படும்.

4. பிறகு சென்னையிலுள்ள போர்ட்செண் சார்ஜ் கெஜட் என்னும் பத்திரிகைக்கு 3-ரூபாய் அனுப்பி தன்னுடைய பெயரை மாற்றி இன்ன பெயர் வைத்துக்கொண்டதாக ரூ. 3ம், பத்திரிகை விலை 0-4-0வும் அனுப்பினால் மாற்றப்பட்டுவிடும்.

வந்த பத்திரிகைக் காப்பியை ஆதாரவாய் வைத்துக்கொள்ளவும். பத்திரிகைகளுக்கு தெரியப்படுத்திவிட்டு புதுப்பெயரை உபயோகிக்கவும்.

---


சைன்யவசதி, கஷ்ட நிவாரண சகாய நிதிக்கு
உதவி தேவை
ஏனென்றால்

**மே. த. கவர்னரின் யுத்த நிதி**

சண்டை காலத்தில் போர்வீரர்களுக்கு எப்படி உதவியதோ, அதேபோல் கடல் கடந்த நாடுகளில் சேவை செய்யும் இந்திய, பிரிட்டிஷ் துருப்புகளின் நலன்களுக்கு இந்நிதி உதவுமேயானல் அதன் உதவி மிகத்தேவை. ஆகவே

தயவுசெய்து தாராளமாகவும், மிக அவசரமாகவும்
பணம் கொடுத்துதவவும்

★

எனவே

தயவுசெய்து உங்களது பணத்தை ஹானரரி டிரஷரர், மே. த. கவர்னரின் சௌகரியங்கள், கஷ்ட நிவாரண சகாயநிதி, C/o இம்பீரியல் பாங்க், இந்தியா முதல் லைன் பீச், சென்னை என்ற விலாசத்துக்கு அனுப்பிக் கொடுக்கவும்.

குடி அரசு

1946-ஆ பிப்ரவரிமீ 16-உ

# தமிழ்நாடு காங்கரஸ் கூத்து

தமிழ்நாடு காங்காஸ்காரர்களுக்குள் ஏற்பட்டிருக்கும் ஒரு சம்பவம் தமிழ்நாடெங்கும் காங்கரஸ்காரர்களுக்குள்ளாகவேவிறுவிறுப்பான பேச்சாக இருக்கிறது என்பதோடு காரங்கரஸ்காரர்களில் பலருக்கு துக்கமாகவும, சிலருக்கு வெட்கமாகவும், சிலருக்கு குஷாலாக்வும் இருக்கிறது.

சங்கதி என்னவென்றால் தமிழ்நாடு காங்கரஸ் கோஷ்டி இப்போது இரண்டாக அதாவது ஆச்சாரியார் கோஷ்டி ஒன்றும், காமராஜர் கோஷ்டி ஒன்றும் ஆக இரண்டாகப் பிரிந்திருக்கிறது. இருவர் கோஷ்டியிலும் சமய சஞ்சீவிகள் தாராளமாக இருந்து இருவரை ஆதரித்து வருகிறார்கள். அப்படிப்பட்ட இரு கூட்டத்தினரில் ஒரு கூட்டத்தினரை (காமராஜர் கூட்டத்தினரை) காந்தியார் அவமதித்து விட்டதாகக் கருதி அதன் தலைவர் காமராஜர் தனது பார்லிமெண்டரி போர்ட் தலைமைப்பதவியை இராஜிநாமா கொடுத்து இருக்கிறார். இந்த இராஜிநாமாதான் இன்றைய விறுவிறுப்புத் தன்மைக்குக் காரணம். பொதுவாகத் தமிழ்நாடு காங்கரஸ் என்றாலும், காங்கரஸ் காரியக் கமிட்டி என்றாலும், தலைவர் என்றாலும், அது சம்மந்தமாக வேறு எது என்றாலும், ராஜகோபாலாச்சாரியார் என்றுதான் அர்த்தமும், உண்மையுமே தவிர மற்றபடி காமராஜருக்கும் மற்றும் காதல் ராஜர்களுக்கும் அதில் கோபுர பொம்மைத் தன்மை தவிர வேறு தன்மை என்ன இருந்தது, இருக்கிறது, இருக்கமுடியும் என்று சிந்தித்துப்பார்க்க ஆச்சாரியாரின் எதிர்க்கோஷ்டியாரை வேண்டுகிறோம்.

ஆச்சாரியார் நடந்துகொண்ட மாதிரி எப்படி இருந்தாலும், அவருக்குத் தமிழ்நாட்டில்] செல்வாக்கு எப்படி இருந்தாலும் அதனாலெல்லாம் தமிழ்நாடு காங்கரஸ் தலைமை, காமராஜர்களுக்கும் காதல் ராஜர்களுக்கும் கிடைத்துவிடும் என்று எண்ணியது இமயமலை அளவு பைத்தியக்காரத்தனமாகும்.

இன்றைய காங்கரசை உண்டாக்கினவர் ஆச்சாரியார், மகாத்மாவை உண்டாக்கினவர் ஆச்சாரியார், இன்னும் சொல்லப்போனால் இன்றைய நிலைமையை உண்டாக்கினவர் ஆச்சாரியார் மற்றும் பல சொல்லலாம். அப்படிப்பட்டவரை தலைமை ஸ்தானத்திலிருந்து தள்ளிவிடலாம் என்று கருதுவது அதுவும் காமராஜர் போன்றவர்கள் கருதுவது சிரிக்கக்கூடிய காரியமென்றே சொல்லுவோம்.

வடநாட்டில் பண்டித நேருவும் மற்றும் இரண்டொருவரும் ஆச்சாரியாரை வெறுக்கிறார்கள் என்பதற்குஆக தென்னாட்டார் அதில் பங்குகொள்ளப் பார்த்தால், வடநாட்டார் ஒன்று சேர்ந்துவிடுவார்கள், தென்னாட்டார் ஆபத்தில் விடப் பட்டுவிடுவார்கள். அதுபோலவே தென்னாட்டில் சில பார்ப்பனர்கள் ஆச்சாரியாரை வெறுக்கிறார்கள் என்பதற்குஆக திராவிடர்கள் சிலர் பங்குகொள்ளப் பார்த்தால் பார்ப்பனர்கள் ஒன்று சேர்ந்துவிடுவார்கள், திராவிடர்கள் ஆபத்தில் விட்டுவிடப் படுவார்கள். அஸ்திவாரத்தையும் பின்பலத்தையும் சரிவர மதிப்பிடாத காரணந்தான் "ஆச்சாரியார் வெறுக்கப்பட்டு விட்டார் விரட்டப்பட்டுவிட்டார், ஒழிந்தார்" என்றெல்லாம் சொல்லப்படுவதே தவிர வேறில்லை.

தென்னாட்டுக் காங்கரஸ் திராவிடர்கள் ஆச்சாரியாரை வெறுக்கக் காரணம் அவர் சர்வாதிகாரம் செய்கிறார்,சிலரை மதிக்கவில்லை, அவர்களுக்குரிய பங்கு கொடுக்கவில்லை என்பதல்லாமல் அவர் பேரில் தப்பு என்பதாக இவர்களால் என்னசொல்லமுடியும்? அதுபோலவே பண்டித நேருவுக்கு அவர்மீது ஆத்திரம் இருந்தாலும் மற்ற வடநாட்டார் அவரை வெறுக்கிறார்கள் என்றால் பாகிஸ்தானுக்கு இணங்கிவிட்டார், காந்தியாரைத் தன் இஷ்டப்படி ஆட்டுகிறார் என்பதல்லாமல் வேறு காரணம் என்ன சொல்லமுடியும்? இந்த இரண்டு குற்றத்தையும் அவர்மீது சுமத்தப்படுவது சட்டப்படி சரியாய் இருக்கலாமே ஒழிய நியாயப்படி எப்படித் தப்பு என்று சொல்ல முடியும் என்று கேட்கிறோம்.

பாகிஸ்தானத்துக்கு சம்மதித்தது தப்பு என்றால், தப்பாகவே இருந்தாலும் தமிழ்நாடு காங்கரஸ்காரர்களுக்கு அதைப்பற்றி எப்படி உண்மையான ஆத்திரம் வரமுடியும்? தமிழ்நாட்டானுக்கு லாபமும் இல்லை, நட்டமும் இல்லை. ஆச்சாரியார்மேல் குற்றம் சுமத்த அதைப் பயன்படுத்திக்கொள்ளலாமே தவிர அதில் உண்மைஇல்லை. மற்றபடி ஆச்சாரியார் சர்வாதிகாரத்தைப்பற்றியும், அவர் ஏதேச்சாதிகாரத்தைப்பற்றியும் தமிழ்நாட்டுக் காங்கரசார் வெளியில் வெளிப்படையாய் குற்றம் சுமத்த முடியாது. ஏனெனில் அப்போது அவரிடம் பொறுப்பு இருந்திருக்கிறது, அவரிடமே காங்கரஸ் தலைமை நிலையத்திற்கும் பார்ப்பன உலகத்திற்கு நம்பிக்கையும், நலம் எதிர்பார்ப்பும் இருந்திருக்கிறது. இன்னமும் இருக்கிறது.

ஆதலால் அவர்மீது சுமத்தப்படும் அக்குற்றம் அவரை தமிழ்நாட்டவர் விரட்டும் படியாகவோ வெறுக்கும்படியாகவோ செய்யத் தக்கதாகி விடாது.

பாகிஸ்தானை அவர் ஒப்புக்கொண்டதுபற்றி வடநாட்டாருக்கு ஆத்திரம் இருக்கலாம், இருந்து என்னசெய்ய முடியும். ஆத்திரப்படுபவர்கள் வேறு திட்டம் சொல்ல வேண்டாமா? பண்டிதரின் வெத்து வேட்டும் நேதாஜி பெயரும், இ.தே.ரா. விசாரணைக் கன்டனக் கூப்பாடும் என்ன செய்யமுடியும்? வெறும் ஓட்டுக்குப் பயன்படலாம். பிறகு செய்யவேண்டியவைகளுக்குத்திட்டம் எங்கே? யார் தகுதிஉடையவர்கள்? என்கின்ற பிரச்சினைக்கு பதில் வேண்டும்.

தமிழ்நாட்டில் ஆச்சாரியார் இல்லாவிட்டால் சட்டசபைப் பேரால் சர்க்கார் ஆட்சி நடத்த ஆள் வேண்டுமே? என்ன ஆட்சி என்றால் பார்ப்பனீயத்திற்கும், வட

நாட்டு சுரண்டலுக்கும் அனுகூலமான ஆட்சி. இந்த ஆட்சியை காந்தியாரும், பார்ப்பனர்களும் காமராஜரை நம்பி விட்டுவிடுவார்களா என்று கேட்கிறோம். இன்றைய காங்கரஸ்; பார்ப்பனர்கள் நலத்திற்கும் வடநாட்டார் சுரண்டுதலுக்கும் அல்லாமல் உண்மை விடுதலைக்கோ சுதந்திரத்திற்கோதான் இருக்கிறது என்று ஏற்படுமானால், அப்போதுதான் காமராஜர்கள் தலைமை வகித்து ஆட்சி நடத்துவது என்பது பொறுத்துக் கொள்ளக்கூடியதாகுமே தவிர மற்றபடி முற்தகூறிய இரண்டுக்கும்என்றால்பார்ப்பனர்களும்வடநாட்டார்களும் ஆச்சாரியாரை இழக்கமாட்டார்கள் என்பதை நம் மக்கள் நன்றாய் உணரவேண்டும் என்று வலியுறுத்துவோம். ஆச்சாரியாரிடம் புத்தி இருக்கிறது, தியாகம் இருக்கிறது என்று வெகு நாளாக சொல்லிவருகிறோம். அதை உலகம், அரசாங்கம், ஜின்னா சாயபு, எதிரிகள் எல்லோரும் ஒப்புக்கொண்டுவிட்டார்கள். அதோடு காந்தியாரும், பார்ப்பனர்களும் நம்பும்படியான அளவுக்கு நாணயமும் இருக்கிறது. அதோடு அவருக்குத் தன் இனத்துக்கு நன்மைசெய்யவேண்டும்இனத்தை எப்படியாவது காப்பாற்றவேண்டும் என்கின்ற உண்மைக் கவலையுமிருக்கிறது. இப்படிப்பட்ட ஒருவரைக் காங்கரசிலிருந்து விரட்டிவிடுவது என்றால் அதற்கு சட்டமுறையும், "ஏகமனதாகப்" போடும் கூச்சல்முறையும் போதுமா என்று கேட்கிறோம்.

ஆச்சாரியாரோடு இருக்கும் பார்ப்பனரல்லாத தோழர்கள் ஆச்சாரியாரைக் கைவிடமாட்டார்கள். ஆனால் காமராஜரோடு இருக்கும் பார்ப்பனத் தோழர்கள் காமராஜரை நட்டாற்றில் விட்டுவிட்டு தலைதூக்காமல் தள்ளியும் விட்டு ஓடிவிடுவார்கள். காரணம்? அவர்களுடைய இனப்பற்று அப்படிப்பட்டது. நம்முடைய இனப்பற்று இப்படிப்பட்டது. இது பண்டையநாள் தொட்டு நடந்துவரும் அனுபவமாகும்.

காமராஜர் தமிழ்நாட்டு காங்கரஸ் கமிட்டித்தலைவரே ஒழிய வடநாட்டாருக்குக் கடுகளவு மதிப்புக்கும் உரியவரல்ல. பார்ப்பனருடைய முள் முனையளவு அன்புக்கும் பாத்திரமானவர் அல்ல. பத்திரிகை விளம்பரத்தால் பெருமையிருந்தால் அப்பத்திரிகைகளுக்கு அப்பெருமையை திருப்பி வாங்கிக் கொள்ளவும், சிறுமைப் படுத்தவும் சக்தி உண்டு என்பதையும் மறந்து விடக்கூடாது.

“ராஜாஜி தலைமை காங்கரசுக்கு இன்றியமையாதது” என்று காந்தியார் எழுதிவிட்ட பிறகு, வேறு யாருக்கு அதைப்பற்றி மறுத்துக் கேட்க உரிமைஇருக்கிறது? என்று கேட்கிறோம். காந்தியார் மீது செய்யப்படும் கண்டனத் தீர்மானமும் அவர் எழுதினதைக் கண்டித்துச் செய்யப்படும் ராஜினாமாவும் குப்பைத்தொட்டியில் போடுவதற்கு அல்லாமல் வேறு எதற்குப் பயன்படும் என்று கேட்கிறோம்.

காமராஜர் ராஜிநாமாவைப்பற்றி எதிர்க்கட்சி காங்கரஸ்காரர்கள் பரிகாசம் செய்கிறார்கள். என்னவெனில் “காந்தியார் எல்லோரையுமே கிளிக் என்றார், ஆனால் காமராஜர் ஒருவர்தானே ராஜிநாமா செய்தார்” “அதிலும் ஒரே ஒரு வேலை” அதுவும் அவருக்கு எவ்வித நட்டமோ தியாகமோ இல்லாத சப்கமிட்டி மெம்பர் வேலைதானே” என்கிறார்கள். அதோடுமாத்திரமா? ஆச்சாரியாரை த. நா. கா. கமிட்டியில் சேர்க்காததற்கு, அ. இ. கா. காரியக் கமிட்டியிலிருந்து தூது ஆள் வந்தது. ஆனால் காமராஜர் ராஜிநாமாவுக்குக் காரியக்கமிட்டி வருத்தங்கூடத் தெரிவிக்கக் கவலை கொள்ளாது. உண்மையில் காந்தியாருடைய எண்ணம் ஆச்சாரியார் இல்லாவிட்டால் சென்னை மாகாண ஆட்சி சரியாய் (தங்கள் நலனுக்கு ஏற்றவண்ணம்) நடவாது என்று கருதுகிறார். அதற்கு அனுகூலமாகவே சர். சி. பி. முதல், இம்மாகாண முக்கிய பார்ப்பனப் பிரமுகர்கள், ஜட்ஜுகள், ஆலோசகர்கள், சாஸ்திரிகள், அல்லாடிகள் யாவரும் காந்தியாரின் காதைக் கடித்திருக்கிறார்கள். இதை மதித்தே காந்தியார் படேல் முதலியவர்களுக்குக் கம்பியில்லாத் தந்தி கொடுத்திருக்கிறார்.

அநேகமாக ஆச்சாரியார் குறிப்பிடும் நண்பர்கள் தான் மந்திரிகளாக வரக் கூடுமென்றும் சொல்லலாம். பார்லிமெண்டரி போர்டு அபேட்சகர்களைத் தெரிந்தெடுக்கும்போது காமராஜர் போக மறுத்து விட்டார். ஆச்சாரியார் அங்கிருந்திருக்கிறார். அவர் கூட தோழர் பக்தவத்ஸலம் அவர்கள் இருத்திருக்கிறார். இருந்தால் என்ன ஆகிவிடும்! அவருக்கு ஒரு மந்திரி என்றால் பக்த—வத்சலனார் தாச—வத்சலமாக ஆகிவிடுகிறார். பக்திமிகுந்தால், தாசராவது இயற்கைதானே என்பார்கள் பெரியோர்கள். அவ்வளவுதான் நடக்குமே ஒழிய வேறு காரியம் என்ன எதிர்பார்க்க முடியும்? பெரிதும் பழைய மந்திரிகள் வருவார்கள. எதிர்க்கட்சிக்கும் சிலது அளிக்கப்படும், ஆனால் அதை எண்ணிக்கை அதிகப்படுத்துவதின் மூலம் சரிசெய்யப் பார்ப்பாரே தவிர ஆச்சாரியார், மெஜாரடி மந்திரிகள் எதிரிகளாகிவிட இடங்கொடுக்க மாட்டார். எலக்ஷன் நடந்தவுடன் கவர்னர் யாரைக் கூப்பிட்டு, அதாவது ஆச்சாரியாரைக் கூப்பிடுவாரா? காமராஜரைக் கூப்பிடுவாரா? அதுவே சந்தேகம். இரண்டாவது, மந்திரிகள் பொறுக்குவது இந்தப் பார்லிமெண்டரி போர்டா; பட்டேல் போர்டா; என்பதும் தெரிந்த விஷயம். எனவே ஆச்சாரியார் சுலபத்தில் கவிழ்த்தப்பட மாட்டாரென்றே கூறலாம்.

ஆனால் எப்போது முடியுமென்றால் காமராஜர்கள் எவ்வித ராஜிக்கும் இணங்காமல் பிடிவாதமாக இருந்து, தங்கள் இஷ்டம் நிறைவேற வில்லையானால் சட்டசபை மெம்பரானவர்களும் பதவிகளிலிருந்து கூட்டோடு ராஜிநாமா செய்து நாலணா மெம்பராக இருந்துகொண்டு காங்கரஸ்காரியக் கமிட்டி தங்களை வீட்டிற்கு அனுப்பும்வரை அல்லது தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டியைக்கலைக்கும்வரை காங்கரஸ் சட்டத்திற்கு அடங்கிய எதிர்ப்பு என்று சொல்லிக் கொண்டு, அதிலேயே இருந்து எதிர்ப்பு நடத்தி பிறகு அவர்கள் வெளியாக்கிய பின் நாட்டில் கட்டுப்பாடாகப் பிரச்சாரம் செய்யத்தொடங்கினால், தொடங்கத் துணிவிருப்பதாகவாவது

காட்டினால், ஒரு அளவுக்கு வெற்றிபெற முடியும். அப்படி இல்லாமல் 2ந்தர 3ந்தர நாணய ஆட்களை நம்பிக்கொண்டு, சில பார்ப்பனர்களையும் நம்பிக்கொண்டு காமராஜர் தொடுத்திருக்கும் போர் வெற்றியடைவது மிக மிகக்கஷ்டம். காந்தியார் "மன்னிப்பு (கேட்கமாட்டார்) கேட்டுக்கொண்ட பிறகு" காமராஜர் தனது ராஜிநாமாவை வாபஸ்பெற்றாலும் அதுவும் தோல்விதான் என்றே சொல்லுவோம்.

காந்தியாருக்கும் காங்கரசுக்கும் என்ன சம்பந்தம் என்பது விளக்கிக் கொள்ளப்பட்டிருந்தால் காமராஜர் ராஜிநாமா செய்திருக்கவேண்டிய அவசியமே இருந்திருக்காது. ஏனெனில் காந்தியார் காங்கரசில் நாலணா மெம்பர்கூட இல்லை என்பதோடு தன்னைக் காங்கரசுக்கு யோசனை சொல்லுபவராக மதித்துக் கொள்ளுகிறாரே தவிர, சொந்தமாக—உரிமையாக ஒன்றும் சொல்லுவதில்லை என்கிறார். அப்படியிருக்க காமராஜர் காந்தியார் வியாசத்தை கமிட்டியில் வைத்து அதற்காகத் தாங்கள் சங்கடப்படுவதாகத் தெரிவித்து இனி அப்படி எழுதமாட்டார் என்று எதிர்பார்ப்பதாகத் தீர்மானம் செய்து நகலை அவருக்கு அனுப்பிவிட்டு இவர்கள் வேலையை இவர்கள் பார்த்திருக்கலாம். அப்படிக்கில்லாமல் இந்த ராஜிநாமாவால் காமராஜர் தானாகவே மாட்டிக்கொண்டார் என்றுதான் கருதவேண்டும்.

இனிமேலாவது காங்கரசிலுள்ள நம் தோழர்களுக்குப் படிப்பினை ஏற்படுமா என்று நம்மை நாமே கேட்டுக் கொள்ளுகிறோம்.

---

## அமங்கலி அம்மாமிகளுக்கு அடித்தது யோகம்

சென்னை மாகாண ஜவுளி கமிஷனர் ஒரு பார்ப்பனர். அவர் அனுப்பியுள்ள 28-12-45 தேதிய R. C. 133214/D.C. 45 நெ. மெமோவின் சாராம்சம்:-

"மில் துணிகள் பார்ப்பன விதவைகளுக்கு கிடைக்காமல் கஷ்டப்படுவதையனுசரித்து மாகாண ஜவுளி கமிஷனர் அவர்கள் அறிவிப்பதென்னவென்றால் பார்ப்பன விதவைகள் தங்களது தேவையைக் கடைக்காரர்களிடம் முன்னதாகவே ரிஜிஸ்டர்செய்துகொள்ள கடைக்காரர்கள் அனுமதிக்கவேண்டும். மில் துணி வியாபாரிகளுக்கு கிடைத்ததும் முதலில் மேற்சொன்ன பார்ப்பன விதவைகளுக்குக் கொடுக்கவேண்டும். பிறகு மீதியிருந்தால் மட்டுமே பொதுமக்களுக்குக் கொடுக்கவேண்டும். இந்த உத்திரவை வியாபாரிகள் துர்உபயோகப் படுத்தாமல் இருக்கும்படி T. C. O. க்கள் கவனித்துக்கொள்ளவேண்டும்"

"சும்மா ஆடுமா......குடுமி" மாகாண ஜவுளி நூல் (பார்ப்பன) கமிஷனர் பார்ப்பன விதவைகள் துணிக்கஷ்டத்தை நீக்குவதற்காக மேற்படி உத்திரவில் ஒரு எச்சரிக்கை விடுத்திருக்கிறார். அந்த எச்சரிக்கை (இந்த உத்திரவை) வியாபாரிகள் துர் உபயோகப்படுத்தாமலிருக்கும்படி T. C. O. க்கள் கவனித்துக் கொள்ளவேண்டும் என்று எழுதியிருக்கிறார். துணி வகைக்கு இதுவரையில் போட்ட உத்திரவுகளை துஷ்ப்பிரயோகப் படுத்திக்கொள்ள முடியாத ஒரு புது முறை இதில் என்ன இருக்கிறது? இருந்தபோதிலும் வியாபாரிகளை எச்சரித்திருக்கிறாரே தவிர பார்ப்பன விதவைகளுக்கு இதில் ஒன்றும் எச்சரிக்கை இல்லை. இப்பொழுது பார்ப்பன விதவைகள் மூலமாக பார்ப்பன குடும்பங்களுக்குத் தாராளமாகத் துணி கிடைக்க வசதியேற்பட்டுவிட்டது. அந்த அம்மாமிகள் தங்கள் விதவைத் தன்மையைக் காட்டி துணிவாங்கி, தாராளமாய் கள்ளமார்க்கட்டில் விற்று அதிகலாபம் கிடைக்கவும் வசதியேற்பட்டு விட்டது. ஆகவே அய்யரின் தர்மம் பார்ப்பனர்களுக்குத் துணியும், சாப்பாட்டிற்கு வரும்படியும் கிடைக்கும்படி வழி செய்துவிட்டது.

அய்யர்கள் கண்ட்ரோலராக இருப்பதால் அவர்களுக்கு எவ்வளவு லாபம் என்பதும், நம்மவர்கள் இருந்தால் நமக்கு எவ்வளவு நஷ்டம் என்பதையும் இந்த ஆட்சி முறை விளக்கும்.

இதிலிருந்தாவது புரிகிறதா? ஜவுளி கண்ட்ரோல் யாருடைய நன்மைக்காகப் பயன்படுகிறது என்று?

---

## மறைந்த மாவீரர்!

பெரியார் அவர்களின் புரட்சிப் புயல்-புதுமைச் சண்டமாருதம், சுயமரியாதைச் சூறாவளி தமிழ்நாட்டில் வீச ஆரம்பித்த காலத்தில் பக்கலில்நின்ற படைத்தளபதிகளில் பெருமைக்குரிய ஒருவர் தோழர் ம. சிங்காரவேலு அவர்கள். 11-2-46 இரவு பாரிசவாயு நோய் அவரை நம்மிடமிருந்து பிரித்தது. 84வயது நிரம்பிய அந்தக் கிழப்புலியின் மறைவுகேட்டு திராவிடம் திடுக்கிட்டது.

தோழர் சிங்காரவேலு காங்கரசையும், காந்தீயத்தையும் பூஷ்வா இயக்கம் என்று ஆணித்தரமான ஆதாரங்களோடு மெய்ப்பித்தவர். நல்லதொரு "நாத்திகர்" கடவுளும் பிரபஞ்சமும் என்ற நூலிலே அவர் கொடுக்கும் சவுக்கடிகள் ஆத்தீகத்திற்கு அதிர்வேட்டு. அவ்வப்போது குடி அரசு, பகுத்தறிவு இதழ்களிலே கனல்கக்கும் அவரது கட்டுரைகள் ஆராய்ச்சி வழிந்தோடும் எழுத்தோவியங்கள்—முற்போக்கை அள்ளிவீசும் அறிவுத் தொகுப்புகள் நோயுற்ற திராவிடத்திற்கு நல்ல கஷாயங்களாக அமைந்தன.

தொழிலாளிகளின் தோழனாகவிளங்கி 10வருடகால சிறைத்தண்டனை அடைந்தார், கிளர்ச்சிகள் பலவற்றில் ஈடுபட்டார். பலத்த எதிர்ப்புகள்—அரசாங்க உத்திரவுகள் இவைகளில் பல முறை மோதுண்ட மரக்கலம் நமது மறைந்த மாவீரர்.

ஜெர்மன், பிரஞ்சு, ரஷ்ய மொழிகளில் திறமைமிக்கவர் சிங்காரவேலர். சட்டப்பரீட்சையில் தேறியிருந்தும் சமுதாய சீர்திருத்த திட்டங்களிலேயே கருத்தைச் செலுத்திவிட்டார்.

அவர் அளித்துப்போன அறிவுக் கருவூலங்கள் திராவிடர் கரங்களை மட்டுமல்ல—கருத்தையும் கவின்பெறச்செய்வனவாகும்.

சிந்தனையாளர் மறைந்தார். சீர்திருத்தவாதி மறைந்தார். பெரியார் இயக்கத்தின் பழைய தோழர் மறைந்தார். கண்ணீர் அரும்பும் கண்களுடனே—தொண்டைக்குழிகள் விம்மிட பெருமூச்சு விடுகிறது சுயமரியாதை உலகம்!

"வாழ்க அவர் புகழ்!" என்று கூறி திகைத்துநிற்கும் திராவிடத்தைத்தேற்றுகிறோம்.

---

## தஞ்சை மாவட்ட திராவிடர் கழகம் அமைப்புக் கூட்ட அழைப்பு

20-2-46 மாலை 5மணிக்கு கும்பகோணம் நாகேஸ்வரர் வடக்கு வீதி டி. எம். நாயர் ஞாபகார்த்த கட்டிடத்தில் நடைபெறவிருப்பதற்கு தஞ்சை மாவட்டத்தின் ஒவ்வொரு தாலூகா பிரதிநிதிகளும் தவராது வந்துசேர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிற,

தங்கள்

கே. கே. நீலமேகம்,
செயலாளர்.

வி. சின்னதம்பி,
நிர்வாக கவுன்சில் ஆடிட்டர்.
திராவிடர் கழகம் கும்பகோணம்.

# திராவிட மாணவர்
# முதல் மாகாண மாநாடு

23, 24-2-46 சனி, ஞாயிறுகளில்
தஞ்சை ஜில்லா நீடாமங்கலத்தில், தாலமுத்து-நடராசன்
பந்தலில் நடைபெறும்.

முதல்நாள் நிகழ்ச்சிகட்கு, சேலம் கல்லூரித் தலைவர்
**தோழர் A. இராமசாமி M.A.,L.T. அவர்கள்**
தலைமை வகிப்பார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகட்கு, "திராவிடநாடு" ஆசிரியர்
**தளபதி C. N. அண்ணாதுரை M. A.,**
தலைமை வகிப்பார்.

மாநாட்டுத்திறப்பாளர்: S. காந்தம் சுந்தரவடிவேல் அம்மையார் M. Sc.

கொடி உயர்த்துவோர்: லாரன்ஸ் அம்மையார்
(மாணவி அண்ணாமலை நகர்)

பெரியார் ஈ. வெ. ரா., கவிஞர் பாரதிதாசன், S. லெட்சுமிரதன் பாரதியார் M. A. B. L., சொக்கப்பா M. A. L. T., K. V. அழகர் சாமி, A. C. பாலசுந்தரம் B. A. L. T., பேராசிரியர் P. S. பிள்ளை M. A. L. T., இரா. நெடுஞ்செழியன் B. A., (Hons), அன்பழகன் B. A., (Hons), A. P. சனார்த்தனம் M. A., E. V. K. சம்பத், T. P. வேதாசலம், திராவிடமணி B. A., காஞ்சி கல்யாண சுந்தரம், மு. கருணாநிதி, K. K. நீலமேகம், வி. சின்னத்தம்பி முதலிய பல் அறிஞர்கள் மாநாட்டில் கலந்துகொள்வார்கள்.

பிரதிநிதிக் கட்டணம் ரூ. 1-0-0
வரவேற்புக் கட்டணம் ரூ. 2-0-0

23-2-46 சனி இரவு தோழர் T. V. நமசிவாயம்
இன்னிசை நடைபெறும்.

குறிப்பு: தீர்மானங்களை 22-2-46க்குள் செயலாளருக்கு
அனுப்பவேண்டும்.

ஆர். இளம்வழுதி, எஸ். சரவணன்,
செயலாளர்கள்.

எஸ். தவமணிராசன்,
வரவேற்புத் தலைவர்.

---

## நீடாமங்கலம் நோக்கி!

1919 மே நாலு! சீனாவிலே மாணவரிடையே கொதிப்பு. பீகிங் நகரத்திலே புகைந்த எரிமலைவெடித்தது. அருமையான திட்டம். அதிக பயங்கரமானது. ஆனால் நோய்க்கேற்றமருந்து. துரோகிகள் தூக்கி எறியப்பட்டார்கள். மாளிகைகள்! மண்டபங்கள்! மந்திரி வீடுகள்! அவைகள் இருந்த இடங்களிலே அழிவு ஆனந்தநர்த்தனம் செய்தது. மந்திரிகளின் மண்டைகளிலே மாணவர்கள் கொடுத்தனர், அடி! அது சீனாவின் தலை எழுத்தை நிர்ணயப்படுத்த ஒரு சாதனம்! இதோ திராவிடம்! பாருங்கள்! படியுங்கள்!

கடவுள், மதம், கலை இவைகளின் பெயரால் இழிவு-உணர்வில், உள்ளத்தில் உப்பளர்—துணிவு இருந்த இடத்தில் துரு—செரணைக்குச் சம்மந்தமில்லாச் சுதந்திர வேட்கை-மொழியிலே தீண்டப்படாத நிலை-மனிதத் தன்மையில் சண்டாளர், சூத்திரர். இவைகளின் நடுவே மாணவரியக்கம். சூது நிறைந்த இடத்தில் சுளீர் எனப்பாயும் சவுக்கு! புரட்சி என்றாலே புன்னகை! அந்த இயக்கம் அழைக்கிறது மாணவரை! எங்கே? நீடாமங்கலத்திற்கு. வஞ்சகம் நாடாமங்கலமாகத் திராவிடத்தை ஆக்க! இழிவு சூடாமங்கலமாக இந்நாட்டை அமைக்க! பார்ப்பனீயப் பரணியைப் பாடாமங்கலமாக இந்நாட்டைப் பார்க்க! அழைப்பு கடுமையானது; அதுவும் காரசாரமானது. "மானத்தை மீண்டும் பெற மாணவரே வருக!" இது அழைப்பின் சாராம்சம். இதில் அடங்கிவிடுகிறது திராவிடத்தின் எதிர்காலப் பூங்கா! சிந்தனைச் சித்திரம்! வருங்காலத் தனியரசு! வாட்டமிருக்காது; வட நாட்டின் நாட்டமிருக்காது, வைதீகக் கூட்டமிருக்காது.

அந்த மறவர் கோட்டத்தின் நிர்மாண வேலையைத் துவக்கத்தான் கூடுகின்றனர் மாணவர். 1946 பிப்ரவரி 23,24! 1919 மே 4! ஆம் சைனாவை நினைவூட்டவேண்டும். திராவிடத்தின் பீகிங் நகரமாக நீடாமங்கலம் அமையவேண்டும்.

நல்லதொரு பயிற்சிப்பட்டாளம் தயாராகும் நாள்! திராவிடத்தின் மணிக்கொடியில் தென்றல் மோத- "வளமார்எமது திராவிடநாடு" கீதம் வானை முத்தமிட 'வாழ்க வாழ்கவே' எதிரொலிக்க வெற்றிபேரிகை கிளப்பும் சத்தம், இமயத்தின் பனிப்பாறைகளைச் சரியச் செய்திடுங்காட்சி! கனவல்ல! இளைஞனின் எதிர்காலத் திட்டம். மாணவனின் மனமாளிகை!

அதற்குத்தான் மாணவர் கூடுகின்றனர். மாணவர் மாநாட்டுக்குத் திராவிடத் தந்தை பெரியார் அவர்களின் அன்பளிப்பு ரூபாய் 100! இந்த நூறும் திராவிட மாணவர் எழுச்சிக்குத்தந்த பரிசு. மாணவரின் ஊக்கத்தால் உந்தப்பட்டு உற்சாகமாகப் பணிபுரிகிறார் தோழர் ஆறுமுகம்! நீங்கள் என்ன? உங்கள் ஆதரவை நீடாமங்கலம் நோக்கி அனுப்புங்கள். திராவிடச் சிங்கங்களே! திராவிடத்தின் பீகிங் நகரை நோக்கிப் புறப்படுங்கள்.

---

### பெரியாரின் நன்கொடை

23, 24-2-46ல் நீடாமங்கலத்தில் நடைபெறப்போகும் திராவிட மாணவர் மாகாண மாநாட்டிற்கு பெரியார் ஈ. வெ. ரா. ரூபாய் 100 நன்கொடை அளித்திருக்கிறார்கள், என் தவமணிஇராசன் தெரிவித்துக் கொள்கிறார்.

## தென்னாற்காடுமாவட்ட திராவிடர் கழக 3-வது மாநாடு

இம்மாதம் 24உ நடக்க இருந்த மாநாடு நீடாமங்கலத்தின் மாநாட்டிற்கு தலைவர்கள் போகவேண்டியிருப்பதால் மறு தேதி, தலைவர்களின் சம்மதிப்பில் குறிப்பிடப்படும். நன்கொடை டிக்கட்டுகள் பெற்ற தோழர்கள் உடன் தொகையை வசூலித்து அனுப்பவும்.

மாநாட்டு செயலாளர்,
சி. முனுசாமி.

## திராவிடர் கழகங்களுக்கு

புதிய ஆண்டிற்கு உறுப்பினர்கள் 1 லட்சம் சேர்க்கவேண்டியிருப்பதால் ஆங்காங்குள்ள கழகப் பொறுப்பாளர்களும், இய்க்கத் தோழர்களும் உடனே வேலை துவக்கவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம். புத்தகம் வேண்டுவோர் தலைமை நிலையத்திற்கு எழுதினால் உடன் அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தலைமை நிலையம், ஈரோடு

## தஞ்சைத் தோழர்களுக்கு அறிவிப்பு

தோழர்களே! கீழ்க்கண்ட முகவரியில் கறுப்புச் சட்டைப்படை அங்கத்தினராய் சேருபவர்களும், திராவிடர் கழக அங்கத்தினராக சேருபவர்களும் பதிந்து கொள்ளலாம். அங்கத்தினர் சேர்க்கும் புத்தகங்களும் கிடைக்கும்.

செயலாளர்
"தஞ்சைத் திராவிட வாலிபர் கழகம்"
கருந்திட்டைக்குடி, தஞ்சை.

## பெங்களூர் திராவிடர் கழகம்

திராவிடர் கழகத்தில் சேரும் பெங்களூர் அன்பர்கள் கீழ்க்காணும் தோழர்களிடம் பதிந்து கொள்ளவும்.

வெ. நாராயணசாமி
195. திராவிடன் ஸ்டோர்
பளேபேட்டை பெங்களூர் சிட்டி.
ஆஜாத் நியூஸ்ஏஜன்ஸ் ஏஸல் மார்க்கெட் எதிர், பெங்களூர் கண்டோன் மெண்ட்.


# உதயம்

(UDAYAM)
வார வெளியீடு
விரைவில் வெளிவரும்

ஆசிரியர்:
M. கந்தசாமி முதலியார்,
கந்தவிலாஸ், திருவத்திபுரம்.

# காலண்டர்கள்

★
வெளிவந்து விட்டது

இதுவரை வெளிவராத காலண்டர்கள். திராவிடநாடு அமைந்த படத்தில் நமது தலைவர்-தளபதி இவர்களுடைய உருவமைந்ததுமான காலண்டர்கள்.

மிகவும் நேர்த்தியாக கண்ணைக்கவரும் முறையில் வெளிவந்துள்ளது.
ஒன்றின் விலை 0-6-0. தபால் செலவு தனி.

திராவிடன் பதிப்பகம்,
தபாற்பெட்டி 18, வேலூர். வ. ஆ.



காலதாமதம்- ஜீவ நஷ்டம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி கவலை வேண்டாம். தவக்கமன்னியில் எங்களுக்குத் தெரிவியுங்கள். தபால் மூலமாகவே தகுந்த ஆலோசனைகளைத் தெரிவிக்கிறோம். கடிதங்கள் பூராவும் அந்தரங்கம். விபரத்திற்கு தபால் தலையுடன் எழுதவும்.

மானேஜர்,
ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, கும்பகோணம்.

# ராஜம் விலாஸ்

கைத்தறி ஜவுளிகள் : : கலர் புடவைகள்
உயர்தர ரகங்கள்! உத்திரவாத ஜரிகை!!
80, 100 நெ. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!
ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

ராஜம் விலாஸ்,
சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் P. O. திருச்சி.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உடனே விடுதலை செய்யுமாறு அரசியலாரை இம் மாநாடு கேட்டுக் கொள்கிறது.

தலைவர்

(2) சென்னை மாகாணத்தின் உணவு நிலைமை மிக நெருக்கடியிலிருப்பதால், கோயில், மடம், ஆஸ்ரமம் முதலியவைகளில், கடவுள் மதம் ஆகியவைகளின் பேரால் வீணாக செலவிடப்பட்டு வரும் உணவுப் பொருள்களுக்கு அரசியலார் வேண்டிய கட்டுப்பாடுகளை எற்படுத்தி அவ்வுணவுப் பொருள்களை மக்களின் தேவைகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்து நம் நாட்டில் பஞ்சம் ஏற்படாமல் செய்ய வேண்டுமென்று அரசியலாரை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

(3) சென்னை நகரபரிபாலன சபைப் பள்ளிக் கூடங்களில் இந்தி மொழியைப் பாடமாக வைப்பதற்கு பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கத் திட்டம் ஏற்படுத்தத் தீர்மானம் வந்திருப்பதை இம் மாநாடு கண்டிப்பதுடன், அத்தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டாமென்று அங்குள்ள திராவிட இன கவுன்சிலர்களையும், மேயரையும் கேட்டுக் கொள்வதுடன், பள்ளிகளில் இந்தி மொழி புகுத்தப்பட்டால் மீண்டும் தமிழ் நாட்டில் போராட்டம் துவக்கப்படும் என்பதை அரசியலாருக்கும் எச்சரிக்கைசெய்கிறது.

(4) திராவிட இனத்தவர்களாகிய நாடார் சமூகத்தினரை பார்ப்பனிய பனியா கூட்டுப் பத்திரிகையாகிய "தினமணி" இழிவு படுத்தியிருப்பதை இம் மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

தலைவர்

(5) பொது ஸ்தாபனங்களில் தமிழ் நாட்டு சட்டசபையில் தமிழ் அல்லாத இந்தி, வங்காளி, முதலிய மொழிகளில் லட்சியச்சொல், பாட்டுகள் முதலியன நடத்தி நம் நாட்டையும், மொழியையும், அவமதிப்பதோடு. அன்னிய மொழியை நம் நாட்டில், புகுத்தும் இழி செயலை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

(6) தியாகராய நகரின் ஒரு பகுதியை இந்துஸ்தானி நகராக மாற்ற வேண்டுமென்று ஒரு சிலரால் செய்யப்பட்டு வரும் சூழ்ச்சிக்கு, சர்க்காரோ அல்லது சென்னை நகரபரிபாலன சபையினரோ ஆணங்குதல் கூடாதென்பதுடன், இவ்வித மாற்றம் செய்யப்பட்டால், தமிழ் நாட்டில் பெருத்த புரட்சி ஏற்படுமென்பதை இம் மாநாட்டின் மூலம் அரசியலாருக்கு எச்சரிக்கையாக எடுத்துக் காட்டுகிறது.

இந்தத் தீர்மானங்களில் ஒன்றாகிய தியாகராய நகரின் ஒரு பகுதியை "இந்துஸ்தான் நகர்" என்று பெயர் இட முயற்சிப்பதைக் கண்டித்துவந்த தீர்மானத்தின் மீது தோழர்கள் கே. அன்பழகன், சி. என். அண்ணாதுரை ஆகியவர்கள் பேசினார்கள்.

தலைவர் முடிவுரையுடனும் வந்தனோபசாரத்துடனும் மாநாடு கலைந்தது. பகல் உணவு பெரியார் அவர்கட்கும், அவருடன் வந்த தோழர்கட்கும் தோழர் எஸ். முத்தையா முதலியார் அவர்கள் இல்லத்தில் நடை பெற்றது.

### மாலை நிகழ்ச்சி

மாலை சுமார் 5-மணிக்கு மயிலாப்பூர் மந்தைவெளியிலிருந்து ஒரு பெரியஊர்வலம் நடைபெற்றது. அந்த ஊர்வலம் 6- ஆண்டுகட்கு முன் இந்தி எதிர்ப்புப் போரின்போது நடைபெற்ற ஊர்வலங்களை ஞாபகப்படுத்தியது. இந்தி எதிர்ப்புப் போருக்குப் பின் இது போன்று சென்னையில் எந்த ஊர்வலமும் நடைபெற வில்லையென்று மக்கள் கருதுகிறார்கள்.

ஊர்வலத்திற்கு முன் நன்றாக அலங்கரிக்கப்பட்ட யானையின் மீது கறுப்புச் சட்டைப் படைத் தொண்டர் அமர்ந்து கறுப்புக் கொடி ஏந்திச் சென்றார்.

அதற்குப்பின் பாண்டுவாத்தியம் முழங்கிச் சென்றது. அதற்குப் பின் 1000 தொண்டர்கள் கறுப்பு உடையுடன் அணிவகுத்துச் சென்றனர். காலையிலிருந்ததைவிட மாலையில் இரட்டிப்பு மடங்கு கறுப்புச்சட்டைத் தொண்டர்கள் சேர்ந்துவிட்டார்கள். மேற்படி தொண்டர்களுக்கு கேப்டன் தோழர் சி. கணேசம், உதவிக் கேப்டன்கள் எஸ். ஆர். சாண்டோ, சுருளிமா ஆகியவர்கள் தலைமை வகித்து மிக அமைதியான முறையிலும், ஒழுங்கான முறையிலும் நடத்திச் சென்றனர்.

தொண்டர்களுக்குப் பின் பெரியார் அவர்களும், சென்னை ஜில்லா திராவிடர் கழகத் தலைவர் சி. டி. டி. அரசு அவர்களும் அமர்ந்திருந்த கார் சென்றது.

அதற்குப் பின் 5000 மக்கள் மிக அமைதியாகவும், ஒழுங்காகவும் ஒரே வரிசையாகச் சென்றனர். ஊர்வலத்தில் பல வாழ்த்தொலிகள் முழக்கிக் கொண்டே சென்றனர். ஊர்வலம் மிக அமைதியான முறையில் செல்வதற்குத் தோழர்கள் என். வி. நடராசன், எ. எ. கபாலமூர்த்தி, என். எம். சுப்பிரமணியம், பாலசுந்திரம், கே. கோவிந்தசாமி, எ. சங்கரைய்யா ஆகியவர்கள் தக்க முயற்சி எடுத்துவந்தார்கள் ஊர்வலம் மயிலாப்பூரிலுள்ள பல முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று சுமார் 7-மணிக்கு மயிலாப்பூர் கடற்கரைக்கு வந்தது. ஊர்வலம் வந்து சேர்வதற்கு முன்பே சுமார் 5000 பேர்கட்கு மேல் அங்கே கூடியிருந்தார்கள். ஊர்வலம் செல்லும்போது பல இடங்களில் பெரியார் அவர்கட்கு மாலைகள் சூட்டினார்கள்.

### கடற்கரைப் பொதுக்கூட்டம்

சுமார் 7-15 மணிக்குக் கூட்டம் ஆரம்பமாயிற்று. சுமார் 15000 பேர்கட்கு மேற்பட்ட ஆண்களும், பெண்களும் கூடியிருந்தார்கள். தோழர் டி. வி. நாராயணசாமியும் மற்ற தோழர்களும் இயக்கப் பாடல்கள் பாடினார்கள்.

தோழர் எம். சொக்கலிங்கம் எம். எ., எம். எல். அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்து திராவிடநாடு பிரிய வேண்டியதின் அவசியம்பற்றிப் பேசினார்.

பின் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் கடற்கரையில் கூட்டம்கூட்டப்பட்டதின் நோக்கத்தைப்பற்றியும், வரப்போகும் மந்திரிசபையார் திராவிடர்களுக்குஎதிராகவும், அவர்களுக்கு இழிவு உண்டாகும் முறையிலும் நடந்துகொண்டால் பழைய இந்தி எதிர்ப்புப்போர் போல் ஒரு போர் ஆரம்பமாகும் என்று எச்சரித்துவிட்டு, திராவிட மக்களின் எதிர்கால வேலைகளைப்பற்றிப் பேசினார்.

பின் பெரியார் அவர்கள் நீண்ட கைதட்டுதலுக்கிடையே எழுந்து சுமார் 2½-மணிநேரம் பேசினார். அவர் பேசும் போது திராவிடநாடு பிரிவினையின் அவசியம்பற்றியும், தேர்தலுக்கு என் நிற்கவில்லை என்பது பற்றியும், காங்கரஸ்கட்சியாரும், காந்தியாரும் செய்து வரும் சூழ்ச்சி வேலைகள் பற்றியும், கறுப்புச் சட்டைப்படைத் தொண்டர்களின் கடமை பற்றியும், திராவிட மக்கள் எதிர்காலத்தில் செய்யவேண்டிய வேலைகளைப்பற்றியும் விரிவாகவும், விளக்கமாகவும் பேசினார். பெரியார் பேச்சு அங்கு கூடியிருந்த மக்களுக்கு உணர்ச்சியும், உற்சாகமும் ஊட்டியது. பின் தலைவர் முடிவுரையுடனும், வந்தனோபசாரத்துடனும் கூட்டம் 11-மணிக்குக் கலைந்தது.

---

### வரப்பெற்றோம்

தவுட்டுப்பாளையத்தில் நடைபெற்ற கரூர் தாலூகா நான்காவது திராவிடர் கழக மாநாட்டின்போது கரூர் கறுப்புச் சட்டைப் படையினரால் கொடுக்கப்பட்ட பெரியார் படத்தை ஏலம் விட்டதில் சேலம் வேலூர் துவக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் தோழர் பாமசிவம் அவர்கள் ரூ 16-0-0க்கு சேலத்தில் எடுத்தவகையில் அனுப்பிய ரூபாய் பதினாறும் வரப்பெற்றோம்.

---

சிவளூரில் 19-1-46 இரவு தோழர் டி. என். இராஜாங்கம் தலைமையில் நடைபெற்ற இசை வேளாளர் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் லெட்சப்பா, மகாதேவன், வெங்கடேசன், தங்கவேல் ஆகியோர் பேசினர்.

# கருணை காட்டுக!

(கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற்ற கிருஷ்ணன்—பாகவதர் விடுதலை முயற்சிக் கூட்டங்களில் தமிழ்மணிகள், நகைச்சுவை அரசு N. S. கிருஷ்ணன், இசை உலக ஒளி M. K. தியாகராச பாகவதர் இருவரையும் கருணை காட்டிவிடுதலை செய்யுமாறு அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்வதாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.)

23-1-46ல் சிறுத்தொண்ட நல்லூர் கிராமப் பொது மக்களால், கலைஞர்களை விடுதலை செய்யுமாறு கோரி சென்னை கவர்னருக்கு ஒரு மனு அனுப்பப்பட்டது.

21-1-46ல் திருச்சேறை திராவிடர் கழக சார்பில் நடந்த பொதுக்கூட்டம்.

21-1-46ல் கும்பகோணம் விஸ்வ பிரம்ம மகாஜன சபை ஆதரவில் தோழர் எஸ். பஞ்சநதீஸ்வரர் தலைமையில் நடந்த பொதுக் கூட்டம்.

20-1-46ல் தாராசுரம் திராவிடர் கழக இரண்டாவது ஆண்டு விழாவில் தோழர் இராமாமிருதத்தம்மையாரால் பிரரேபிக்கப்பட்டுத் தோழர் பாவலர் பாலசுந்தரத்தால் ஆதரிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

3-1-46ல் சேலத்தில் ராவ்பகதூர் எஸ். துரைசாமிப் பிள்ளை தலைமையில் நடைபெற்ற சேலம் ஜில்லா 2வது மருத்துவர் சங்க ஆண்டு விழாவில் நிறைவேற்றப்பட்டது.

26-1-46ல் கடலூர் சினிமா ரசிக இளைஞர் மன்றத்தினரால் "அபாய அறிவிப்பு" என்ற தலைப்பில் கலைஞர்களை விடுதலை செய்யக்கோரி மக்களிடத்தில் துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

26-1-46 சனிக்கிழமை மாலை நீடாமங்கலம் பஞ்சாயத்து போர்டு கூட்டத்தில் கலைஞர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொண்டு தோழர் ஆ. ஆறுமுகம் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

26-1-46ல் திட்டக்குடியில் தோழர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

17-1-46-ல் நடைபெற்ற குணிய முத்தூர் பஞ்சாயத்து போர்டுக் கூட்டத்தில் தோழர் கே. ஆர். சண்முகம் கொண்டு வந்த மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

27-1-46-ல் வேலூரில் நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

30-1-46ல் வேளுக்குடி திராவிடர் கழகக்கூட்டத்தில்நிறைவேற்றப்பட்டது.

31-1-46ல் நாசரேத் திராவிடர் கழகக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

27-1-46ல் அருப்புக் கோட்டை செங்குந்தர் வாலிபர்சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

28-1-46ல் சேலம் தென்னிந்திய வீர சைவ சங்கமர்கள் 2-வது மாநாட்டு நிரந்தரக் கமிட்டிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

26,27-1-46ல் நெல்லையில் நடைபெற்ற மாவட்ட மாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

1-2-46ல் வேலூரில் (வ. ஆ.) நடைபெற்ற வட ஆற்காடு மாவட்ட நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

3-2-46ல் உலகியல் நல்லூரில் தோழர் ஏ. கிருஷ்ணசாமி தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

20-1-46ல் வேலூரில் தோழர் எஸ். சோமசுந்தர பாரதியார் எம் ஏ; பி. எல். அவர்கள் தலைமையில் நடந்த தமிழ்த் திருநாள் கூட்டத்தில் கருணை காட்டுக, தீர்மானம் நிறைவேறியது.

30-1-46ல் நிலக்கோட்டை பஞ்சாயத்து போர்டுக் கூட்டத்தில் தோழர் எஸ். நடராஜனால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

17-1-46-ல் நடைபெற்ற திருவண்ணாமலை நகரசபைக் கூட்டத்தில் கலைஞர்களை விடுதலை செய்யக்கோரி தோழர் மாணிக்கவேலு அவர்கள் கொண்டுவந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

31-1-46ல் நிகழ்ந்த ஈரோடு நகரசபைக் கூட்டத்தில் தலைவர் ஆர். கே. வெங்கிடுசாமி அவர்களால் கொண்டுவரப்பட்ட "கலைஞர்கள் கிருஷ்ணன் பாகவதர் விடுதலை வேண்டுகோள் தீர்மானம்" ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## அறிக்கை

நெல்லை மாவட்டத்திலுள்ள கழகங்கள், 1946ம் வருடத்திற்கு அங்கத்தினர் சேர்க்கும் ரசீது புத்தகத்தை, நெல்லை கழகத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளவும். அந்தந்த ஊரில் கழகம் அமைத்திருந்தால் கழகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். இல்லையேல், கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

நெல்லை மாவட்ட கழகம்,
C/o குமாரவிலாஸ் காப்பி ஹோட்டல்,
திருநெல்வேலி டவுன்.

## பாரத நாடு

தேசபக்தர்கள் சொல்லிவந்த "பாரத நாடெங்கள் நாடே" என்பதற்குப் பொருள் இப்பொழுதுதான் தெளிவாயிற்று. நாட்டுப் பெண்மணிகள் எல்லோரும் திரௌபதியைப்போல் இருக்க ஆசைப்படவேண்டுமென வார்தா ரிஷிபுங்கவர் மகாத்மா காந்தியடிகள் உபதேசம் செய்துவிட்டார். அவரது சென்னை திக் விஜயத்திலே இந்த உபதேசம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும். பாரதக் கதையின் பத்தினிகளாக நாட்டுப் பெண்கள் ஆகவேண்டுமென்பதுதான் பாரத நாடு என்ற பாட்டின் சுருக்கம் போலும்,

ஓ தேசிய ஆண் மக்களே! யாராவது பெண்களிடம் காந்தியாரின் உபதேசத்தை வாய்விட்டுச் சொல்லி வாழ்த்திவிடாதீர்கள்! நிலைமை ஆபத்தில் முடியும்.

## திருமணம்

6-2-46ல்சேலம் செவ்வாய்ப்பேட்டையில் நடந்த சந்திரய்யன்-அம்சவேணி திருமணத்திற்கு பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சென்றிருந்தார். தோழர்கள் எஸ். கே. வேலாசாமி செட்டியார், எஸ். வி. மாணிக்கம் ஆகியவர்கள் பெரியார் அவர்களை வரவேற்று சிற்றுண்டி அளித்து உபசரித்தார்கள். "குடி அரசு" பத்திரிகைக்கு மணமகனால் 10 ரூபாயும் மணமகளால் 10 ரூபாயும் நன்கொடையாக அளிக்கப்பட்டது.

## பிறப்பு

தாரமங்கலம் தோழர் டி. வி. கைலாசன் அவர்கள் மனைவியாருக்கு 24-6-45ல் பிறந்த குழந்தைக்குத் திராவிடமணி என்று பெயரிட்டதின் நினைவாகக் குடி அரசு வளர்ச்சிக்கு ரூ 1 நன்கொடை அளிக்கப்பட்டது.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42. Cutchery street, ERODE.